கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட பொதுக்கலைமாணித் தேர்வு - 2007/2008 (வெளிவாரி)
(செப்ரம்பர்/ஒக்டோபர் 2010)

# ECO 202 Macro Economics

LIBRARY
11 FEB 20
Eastern University, Sri Lanka.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01.(அ) சமநிலை மட்டத் தேசிய வருமானம் என்றால் என்ன? மூடப்பட்ட பொருளாதாரம் ஒன்றில் அதற்கான நிபந்தனைகளைத் தருக?
(10 புள்ளிகள்)

(ஆ) ஒரு பொருளாதாரத்தின் நுகர்வுத் தொழிற்பாடு பின்வருமாறு

$$C = 40 + \frac{4}{5}Y$$

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக?

(i) இப் பொருளாதாரத்தில் ரூபா 30 மில்லியன் என்ற அளவிற்கு தனியார் முதலீடு இடம் பெறும் போது சமநிலைத் தேசிய வருமான மட்டம் யாது?
(05 புள்ளிகள்)

(ii) அரசாங்கக் கொள்வனவுகள் ரூபா 20 மில்லியன் என்ற அளவு இடம் பெறுகின்றது. அதேயளவிற்கு வரியும் விதிக்கப்படுகிறது. புதிய சமநிலை தேசிய வருமான மட்டம் எவ்வளவு?
(05 புள்ளிகள்)

02.(அ) பேரினப் பொருளாதாரக் கொள்கையின் பிரதான நோக்கங்களைக் குறிப்பிடுக?
(08 புள்ளிகள்)

(ஆ) பழம் பொருளியலாளர்களின் வெளியீடு மற்றும் வேலை வாய்ப்புக் கோட்பாட்டினை விளக்கி விமர்சிக்குக.
(12 புள்ளிகள்)

03.(அ) முழு வருமானக் கோட்பாட்டையும், சார்பு வருமானக் கோட்பாட்டையும் வேறுபடுத்துக?
(12 புள்ளிகள்)

(ஆ) கேள்வித்தூண்டல், செலவுத்தூண்டல் பணவீக்கங்களை வேறுபடுத்துக.
(08 புள்ளிகள்)

04.(அ) பணத்திற்கான உத்தேச நோக்கக் கேள்வியினை விளக்கி, வட்டி வீதத்துடனான அதன் தொடர்பினை ஆராய்க.

(12 புள்ளிகள்)

(ஆ)"திரவப் பொறிநிலை" யினை விளக்கி அவ்விளக்கத்தின் பொருளாதார முக்கியத்துவத்தினை விளக்குக?

(08 புள்ளிகள்)

05.(அ) இறைக்கொள்கையானது எவ்வாறு மொத்தக்கேள்வியில் செல்வாக்கு செலுத்துகின்றது? ஆராய்க.

(10 புள்ளிகள்)

(ஆ) வர்த்தக சகட ஓட்டம் என்பதனை அதன் பல்வேறு கட்டங்களூடாக வரைபடத்தைப் பயன்படுத்தி விளக்குக.

(10 புள்ளிகள்)

06.(அ) நிலையான மற்றும் மிதக்கும் நாணயமாற்று வீத முறைகளின் பலம் மற்றும் பலவீனங்களை விமர்சன ரீதியாக பரிசீலிக்குக.

(12 புள்ளிகள்)

(ஆ) ஒரு நாட்டின் சென்மதி நிலுவையின் தொடர்ச்சியான பாதக நிலை எவ்வாறு அதன் நாணயமாற்று வீதத்தைப் பாதிக்கும்?

(08 புள்ளிகள்)

07.(அ) வேலையின்மையின் பிரதான பிரிவுகளை குறிப்பிட்டு விளக்குக.

(12 புள்ளிகள்)

(ஆ) இலங்கையில் கல்வி கற்றோரிடையே காணப்படும் வேலையின்மையின் சமூக பொருளாதார விளைவுகளை விளக்குக.

(08 புள்ளிகள்)

08. பின்வருவனவற்றிற்கு சிறுகுறிப்பு வரைக.

(அ) முதலின் எல்லை வினைத்திறன் (MEC)
(ஆ) GSP+ தீர்வைச் சலுகை நீக்கத்தின் பொருளாதாரத் தாக்கம்
(இ) பிலிப்ஸ் வளையி (Phillips Curve)
(ஈ) வணிக வங்கிகளின் கடன் ஆக்கத் தொழிற்பாடு

(4x5=20 புள்ளிகள்)

*********